1975 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எக்ஸ்போர்ட் கவுன்சில் என்று இருக்கிறது. அதைப் பற்றிச் சொல்லுகிறாரா என்று தெரியவில்லை. தனியாகக் கேட்டால் விவரம் அளிக்கலாம். ரிபேட்டைப் பொறுத்தவரை நம்முடைய மாநில அரசு மிக அதிகமாகக் கொடுத்து வருகிறது. மத்திய அரசு கொள்கை அளவில் இது கூடாது என்று சொல்லுகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மத்திய கூட்டுறவுச் சங்கங்கள் 25 சதவிகிதம் லாபம் வைத்து விற்கின்றன என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அந்த லாபம் பிரதம சங்கங்களுக்குப் போகிறது என்று தாராள மாகச் சொல்லுகிறார்கள். இடையில் கொஞ்சப் பேர் எங்களைப் போன்ற கொஞ்சம் பெண்கள் கைத்தறிச் சேலை அணிகிறோம். அந்தச் சேலைகளின் விலை 50 ரூ. 60 ரூ. என்று விற்கப்படுகிறது. ஆகவே, அந்த லாபம் 10 சதவிகிதத்திற்கு மேல் போகக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிட்டு, விலையைக் குறைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் கைத்தறிச் சேலை கட்டியிருக்கிறார்களா என்று தெரியவில்லை. (சிரிப்பு) ஆனால் பொதுவாகப் பார்க்கிறபோது, தனியாரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மாநிலச் சங்கங்கள் விற்பது குறைந்த விலையில்தான் விற்கப்படுகிறது.

விக்கிரமசிங்கபுரம் மலைப்பகுதி

*116 வினா—**திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா, விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சிப் பகுதி மலைப்பிரதேச பகுதியென அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) விக்கிரமசிங்கபுரம் மலைப் பகுதிகளில் பயிரிடப்படும் வாழைக்கு வேளாண்மை வருமான வரி விதிப்பதற்காக திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள விக்கிரமசிங்கபுரம் மலைப்பகுதியென அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்டாண்டர்டு ஏக்கராக மாற்றுவதில் மலைப்பகுதிகளில் பயிரிடப் படும் வாழைப் பயிருக்குச் சில சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

Allotment of plots by Slum Clearance Board

*117 *Q.*—Thiru P. SOUNDARAPANDIAN: Will the Hon. the Minister for Co-operation be pleased ot state—

(*a*) whether it is a fact that the Slum Clearance Board has decided to sell the Open Developed Plots in the City of Madras hitherto allotted to the public on rental basis; and

(*b*) if so, whether the allottees will be permitted to avail the loan facilities through Co-operative Societies and Government?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) ஆம். இதுபற்றிய தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டு அதிலே வாடகைக்கு இருந்து வரும் பொது மக்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் இதுவரை அவர்களிட மிருந்து வசூலித்த வாடகையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அதை அவர்களுக்கே விற்பனை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தற்போது 60 சத விகிதத்திற்கு மேல் உள்ள இடங்களில் வாடகைக்குக் கொடுத் திருக்கக்கூடிய இடங்களில் பல்வேறு தவறுகள் நடந்திருக் கின்றன. குடிசைமாற்று வாரியக் குழுத் தலைவர் மூலமாக 1974 பிப்ரவரி மாதம், 17—6—1974 ஆகிய நாட்களில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் ஒரு ப்ரொபோசல் அனுப்பப் பட்டிருக்கிறது. 800 சதுர அடி உள்ள இடத்திற்கு மாதம் 8 ரூபாய் விதம் கொடுப்பவர்கள் 15 ஆண்டுகளுக்குச் செலுத்தி வந்தால் அவர்களுக்கே சொந்தமாக்குவது என்றும், ஒரே தவணையில் கட்டுவதானால் 1,440 ரூபாய் வாங்கிக் கொண்டு அவர் களுக்குச் சொந்தமாக்குவது என்றும் தவறான முறையில் யாரேனும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தால் நடவடிக்கை